**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித்திங்கள் 02 ம் நாள்

**இடைநிலை மனு எண். 601/2024-ல்**

**அசல் வழக்கு எண். 131/2018**

Dr. S. R.V. தங்கமணி ..... மனுதாரர்/வாதி

**// எதிர்//**

R. மலர்க்கொடி ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V. ரவிச்சந்திரன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. உதயகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்து இன்று (14.02.2025) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனு மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் P208/1996 ஆவணம் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நீதிமன்றத்திற்கு தெருவிக்க Send for செய்திட உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 75 CRP மற்றும் 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக மன்னார்குடி, சார் பதிவாளர் அலுவலகத்தில்

ஆவண எண்.1621/1997 ஆக கட்டாய பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தை ரத்து செய்திட வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் கடந்த 30.08.1996-ல் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணத்தை மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் கட்டாய பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி ஆவணம் முடிவுறா ஆவணம் என்ற காரணத்தினால் மேற்படி ஆவணம் மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட மனு P208/1996 என நிராகரிக்கப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நாகப்பட்டிணம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எனது கையெழுத்தை மோசடியாக எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் போடப்பட்டு அது கட்டாய பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மாவட்ட பதிவாளர் அவர்களின் உத்தரவின் பேரில் மன்னார்குடி, சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1621/1997 ஆக கட்டாய பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலகத்தின் P208/1996 ஆவணமும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கும் சான்றிட்ட நகல் கோரி வழங்கப்படவில்லை. மேற்படி மன்னார்குடி, சார் பதிவாளர் அலுவலகத்தின் P208/1996 ஆவணம் மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவும் இவ்வழக்கில் மனுதாரரது தரப்பு கட்சியை நிரூபணம் செய்வதற்கு மிகவும் அவசியமான ஆவணமாக உள்ளது.

மேற்படி கிரய பத்திரத்தில் மனுதாரர் கையொப்பம் இல்லை என்று முடிவுறா ஆவணம் என்று நிராகரிக்கப்பட்ட பின்னர் மேற்படி கிரய பத்திரத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர் கையொப்பம் மோசடியாக போடப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதனை

மனுதாரரது தரப்பில் நிரூபணம் செய்ய வேண்டி மன்னார்குடி, சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து P208/1996 ஆவணம் அத்துடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை Send for செய்ய வேண்டியது நியாயமும். அவசியமானதாகவும் உள்ளது. அவ்வாறு இல்லையேல் மனுதாரருக்கு அளவிட இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்படுவதாக உள்ளது.

ஆகவே மன்னார்குடி, சார் பதிவாளர் அலுவலகத்தின் P208/1996 ஆவணம் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மன்னார்குடி, சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து Send for செய்திட உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :-</u>

மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத் தக்கதல்ல. மனு விவரங்களை எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். மனுதாரரே மனுவை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். வாதி தரப்பில் சாட்சி விசாரணை முடிந்து விட்டது. ஏற்கனவே P.W.2 ஆக மன்னார்குடி. சார்பதிவாளர் விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டு விட்டார். வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட ஆவணமானது 30.08.1996-ல் ஏற்பட்டதாகும். அந்த ஆவணத்தை பதிவு செய்த நடைமுறைகள் அனைத்தும் இந்த வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றொரு அசல் வழக்கான O.S.No.13/2013 வழக்கு காலதாமதத்தை மன்னிக்கக்கூடிய மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு விசாரணையில் மேற்படி வாதி, பிரதிவாதி சம்மந்தப்பட்ட ஆவணங்கள், விசாரணை கோப்புகள் அனைத்தும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து நகல் பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பி206/96 ஆவணம் முதலில் பி296 என நம்பர் அளிக்கப்பட்டு பிற்பாடு மாவட்ட பதிவாளர் உத்தரவுப்படி மன்னார்குடி, சார்பதிவாளர் அலுவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பதிவு ஏற்பட்டு 60 நாட்களுக்குள் பத்திரபதிவு சட்டப்படி இந்த வாதி மேல்முறையீடு செய்யாமல் இருந்துவிட்டு 21 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கூறியுள்ள கட்சிகளை எல்லாம் ஏற்கனவே மாவட்ட பதிவாளர் முன்பு கூறி அது நிராகரிக்கப்பட்டுவிட்டது. மேலும் இந்த வாதி கையெழுத்து நிபுணரை நியமிக்க இந்த வழக்கில் எந்தவொரு மனுவும் அளிக்காமல் 24.12.1996 ம் தேதியிட்ட உத்தரவை சென்ட் பார் செய்ய வேண்டும் என மனு அளித்திருப்பது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல.

மனுதாரர் கோரியுள்ள ஆவணம் பத்திரப்பதிவு சட்டப்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு உத்தாவாகும். சான்றியல் சட்ட விதிகளின் படி அது ஒரு பொது ஆவணமாகும். அந்த பொது ஆவணத்தின் சான்றிட்ட நகலை பெற வாதிக்கு வழிவகைகள் உள்ளது. வாதி மனு கொடுத்து நகல் பெற்று தாக்கல் செய்யாமல் முறைகேடான வழிகளில் மேற்படி ஆவணத்தை பெற முயற்சி செய்கிறார். அசல் ஆவணத்தை சென்ட் பார் செய்ய வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது. மேலும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சார்பதிவாளர் தங்களது அலுவலகத்தில் தற்போது ஆவணம் இல்லை என குறுக்கு விசாரணையில் கூறிய பிறகு மீண்டும் அதே ஆவணத்தை சென்ட் பார் செய்ய மனு கொடுத்திருப்பது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்று கூறி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) <u>தீர்வு</u>:-

**1.** மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலணை செய்கையில், மனுதாரர்/வாதி தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி பெயருக்கு மாவட்ட பதிவாளர் கட்டாய பதிவு செய்ய வழங்கிய 04.08.1997 ம் தேதியிட்ட மேல்முறையீடு எண்.06/1997-ல் ஏற்பட்ட உத்தரவும் அதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு மன்னார்குடி சார்பதிவாளர் செய்து கொடுத்துள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.1621/1997 கிரய சாசனம் செல்லாது என்று விளம்புகை செய்யவும், வாதிக்கு சொந்தமான தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி மூன்றாம் நபர்களுக்கு எவ்வித பாரதீனமும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**4.** அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்கள் வனைந்து, வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சிகள் விசாரணையில் மன்னார்குடி சார்பதிவாளர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்கொண்டு மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.** மனுதாரர் மன்னார்குடி, சார்பதிவாளர் அலுவலகத்தின் P208/1996 ஆவணமும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கும்

சான்றிட்ட நகல் கோரி வழங்கப்படவில்லை என்பதால் மேற்படி மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் P208/1996 ஆவணம் மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்ட்ட மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவும் இவ்வழக்கில் மனுதாரரது தரப்பு கட்சியை நிரூபணம் செய்வதற்கு மிகவும் அவசியமான ஆவணமாக உள்ளது என்பதால் மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை Send for செய்ய வேண்டி மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

**6.** எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் கடந்த 30.08.1996 ல் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தை மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கட்டாய பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் மேற்படி ஆவணம் முடிவுறா ஆவணம் என்ற காரணத்தினால் மேற்படி ஆவணம் மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட மனு P208/1996 என நிராகரிக்கப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது.

**7.** மன்னார்குடி சார்பதிவாளர் சாட்சியத்தின்போது அவரது அலுவலகத்தில் தற்போது ஆவணம் இல்லை என குறுக்கு விசாரணையில் கூறிய பிறகு மீண்டும் அதே ஆவணத்தை சென்ட் பார் செய்ய மனு கொடுத்திருப்பது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்று கோரி ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

**8.** சார்பதிவாளரான வா.சா.2 சாட்சியத்தின்போது "மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில்தான் சார்பதிவாளர் ஆவர்களால் ஆவண எண்.1621/1997 யை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் P208/1996 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இணைத்துதான் ஆவண எண்.1621/1997 பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மன்னார்குடி

சார்பதிவாளர் அலுவலகத்தில் இல்லை. ஏற்கனவே சார்பதிவளாரால் பதிவு செய்ய இயலாது என்று திருப்பப்பட்ட ஆவணத்தை மீண்டும் சார்பதிவாளரால் பத்திர பதிவு செய்ய வேண்டும் என்றால் மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இணைத்து கொடுத்த பிறகுதான் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான்" என்று கூறியுள்ளார்.

**9.** ஆவண எண்.1621/1997 யை பதிவு செய்யப்பட்ட போது அதில் P208/1996 என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இணைத்துதான் ஆவண எண். 1621/1997 பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று கூறியுள்ள நிலையில் அந்த ஆவணத்தை Send for செய்ய உத்தரவிடுவதன் மூலம் எதிர்மனுதாரருக்கு எந்த இழப்பும் ஏற்பட போவதில்லை என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் வழங்கி தீர்வு காண்கின்றது.

6) **முடிவில்**, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் நாள் வெள்ளிக்கிழமை அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.17 15:27:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.17 15:27:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.